பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 03 2025 **SUNDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நாட்டின் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

2) உலக நாடுகள் உடனான வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரிக்க இந்தியா நடவடிக்கை எடுத்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3) அமெரிக்காவுடனான வர்த்தக உடன்படிக்கைகளை சிறப்பாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

4) நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு நாளை தொடங்குகிறது.

5) **Kigali** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Siddhant Banthia –** பல்கேரியாவின் **Alexander Donski** இணை பட்டம் வென்றது.

--- *இனி விரிவான செய்திகள்* ---

**<<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நாட்டின் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் **'Junagadh '** —ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு திட்டங்களை தொடங்கிவைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

நாட்டின் பாதுகாப்பிற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

**Junagadh '** —ல் உள்ள பிரம்மானந்த் வித்யாதாம் வளாகத்தில் அங்கன்வாடி முதல், மருத்துவக்கல்லூரி வரை இயங்கிவருவதை சுட்டிக்காட்டிய அவர், மருத்துவமனை, கால்நடை மருத்துவமனை, இயற்கை மருத்துவ மையம், ராணுவப்பள்ளி என அனைத்து வகையான கல்வி நிலையங்களும் செயல்படுவது பாராட்டத்தக்கது என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

உலக நாடுகள் உடனான வர்த்தகம், போக்குவரத்து மற்றும் முதலீடுகளை அதிகரிக்க இந்தியா நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் மான்செஸ்டரில் இந்திய வம்சாவளியினர் மற்றும் தொழில்துறையினருடன் கலந்துரையாடிய அவர், இருநாடுகளுக்கு இடையே சுற்றுலா மற்றும் போக்குவரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் இந்தியாவிற்கு பெருமிதம் அளிக்கும் வகையில் பணியாற்றி வருவதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அமெரிக்காவுடனான வர்த்தக உடன்படிக்கைகளை சிறப்பாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விநியோக சங்கிலி சுமூகமாக அமைவது உறுதி செய்யப்படும் என்றார்.

அதேவேளையில், அமெரிக்காவின் வரி உயர்வால் பிற நாடுகளிலிருந்து பொருட்கள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுவது முறைப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், உள்நாட்டு தொழில்துறையினரின் நலன்களை பாதுகாக்கவும் அரசு உறுதிபூண்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஜனநாயகம் என்பது தேர்தலை நடத்துவதோடு மட்டுமல்லாமல், தொடர் விவாதங்கள் மற்றும் ஒருமித்த கருத்து ஏற்படுத்துவதை முன்னெடுத்துச் செல்வதாக அமைய வேண்டும் என மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில், ராஜஸ்தான் அரசியல் சாசன மன்றத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் திட்டமிட்ட இடையூறு ஏற்படுத்துவது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்றார்.

அரசியல் சாசன மன்றம் போன்ற அமைப்புகள் ஜனநாயக ரீதியான விவாதங்கள் மற்றும் கொள்கை வகுப்பதற்கும் நல்லாட்சியை மேலும் முன்னெடுத்துச் செல்லவும் உதவிகரமாக இருக்க வேண்டும் எனவும் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு நாளை தொடங்குகிறது.

இந்த அமர்வு அடுத்த மாதம் 4-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்த அமர்வின்போது பல்வேறு துறைகளுக்கான மானியக்கோரிக்கைகள் மற்றும் நிதி ஒதுக்க மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

இதுதவிர வங்கிகள் சட்டத்திருத்த மசோதா, குடியேற்ற மசோதா, ரயில்வே திருத்த மசோதா உள்ளிட்ட மசோதாக்களும் தாக்கல் செய்யப்பட உள்ளன.

கடந்த ஜனவரி 31-ஆம் தேதி குடியரசுத் தலைவர் உரையுடன் தொடங்கிய பட்ஜெட் கூட்டத்தொடரில், பிப்ரவரி ஒன்றாம் தேதி மத்திய அரசின் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

அதன்பின், ஜனவரி 13-ஆம்தேதி வரை நடைபெற்ற முதலாவது அமர்வில் பல்வேறு முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>

சுதந்திர தின நூற்றாண்டை கொண்டாடும்போது, இந்தியா வல்லரசு நாடாக திகழும் என்று இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் கன்னியாகுமரி அருகே தனியார் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர்,

ஆழ்கடல் மீன்வளத்தை கண்டறியும் செயலி மூலம், ஆண்டுக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் லாபம் கிடைப்பதாக கூறினார்.

நிலவில் இருந்து பூமிக்கு மண் எடுத்துவருவதற்கான சந்திரயான்-4 திட்டம் 2028-ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும் என்று திரு நாராயணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக நாளை மறுநாள் மொரிசியஸ் செல்கிறார்.

புதுதில்லியில் இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி, மொரிஷியஸ் தேசிய தின கொண்டாட்டத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளதாக கூறினார்.

மேலும் அந்நாட்டில் உள்ள சிவ்சாகர் ராம்கூலம் தாவரவியல் பூங்காவையும் பிரதமர் பார்வையிட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா – மொரிசியஸ் இடையிலான நட்புறவு வரலாறு, கலாச்சாரம் மற்றும் இருநாட்டு மக்களுக்கு இடையேயான உறவின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பல நூற்றாண்டுகளாக இந்த நட்புணர்வு தொடர்வதாகவும் அவர் கூறினார்.

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில், இந்தியாவின் முக்கிய நட்பு நாடாக மொரிஷியஸ் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் இந்தியா – மொரிஷியஸ் இடையிலான உறவு மேம்பட்டிருப்பதாகவும் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ராணுவ தளபதி ஜெனரல் அனில் சௌகானின் ஆஸ்திரேலியா பயணம் இருநாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை விரிவுபடுத்த உதவும் என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பிராந்திய அளவிலான பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் இந்த பயணம் வழிவகுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வு அடிப்படையில் இந்தியா – ஆஸ்திரேலியா ஒத்துழைப்பு அமைந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

சிறந்த மொழி பெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருது கிடைத்திருப்பது தமது பணிகளுக்கு ஊக்கம் அளிக்கும் என்று தமிழகத்தின் திருநெல்வேலியில் பணிபுரியும் பேராசிரியர் திருமதி விமலா தெரிவித்துள்ளார்.

“எண்ட ஆண்கள்” என்ற மலையாள நூலை தமிழில் மொழி பெயர்த்ததற்காக இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள அவர், அதிக மொழிகளை கற்பது இதுபோன்ற மொழி பெயர்ப்புகளுக்கு உதவும் என்று தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - விமலா – 38 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

உலகிற்கு ஞானத்தை வழங்கிய மொழிகளில் முக்கியமானதாக தமிழ் மொழி திகழ்கிறது என்று உச்சநீதிமன்ற நீதிபதி திரு மகாதேவன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் திருவண்ணாமலையில் நடைபெற்ற உலக திருமந்திர தமிழ் ஆய்வு மாநாட்டில் பேசிய அவர், உலகத்தை அறிந்துகொள்ள திருக்குறளையும், இறையருளை அறிந்துகொள்ள திருவாசகத்தையும் படிக்க வேண்டும் என்று கூறப்படுவதை சுட்டிக்காட்டினார்.

உலகத்தோடு உளவியலையும், நம்மையும் அறிந்துகொள்ள திருமந்திரத்தை படிக்க வேண்டும் எனவும் நீதிபதி மகாதேவன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Kigali** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Siddhant Banthia –** பல்கேரியாவின் **Alexander Donski** இணை பட்டம் வென்றது.

ருவாண்டாவில் நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 5-7, 10-8 என்ற செட் கணக்கில் ஃபிரான்சின் **Geoffrey -** செக் குடியரசின் **Zdenek Kolar** இணையை வென்றது.

----------------

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி பிற்பகல் மணி 2.30-க்கு தொடங்குகிறது.

--------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் உத்தரப்பிரதேச அணி 12 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய உத்தரப்பிரதேச அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், ஐந்து விக்கெட் இழப்பிற்கு 225 ரன் எடுத்தது.

226 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி 19 புள்ளி மூன்று ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 213 ரன் மட்டுமே எடுத்தது.

--------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை - ஜம்ஷெட்பூர் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<<>>>>>**